**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC - 635 of 2024**

**வழக்கு சாட்சி:PW – 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வானுமாமலை | தேதி : | 18.08.2025 |
| தந்தை பெயர்: | கணபதி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(2 ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 18.08.2025.

**முதல் விசாரணை**

நான் மறுகால் குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் நம்பி நகரில் உள்ள TVS மில்லில் பணி செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா2 எனது மகள்கள் ஆவார்கள். ஆஜர் எதிரி மற்றும் ஆஜர் இல்லாத எதிரியையும் எனக்கு தெரியும். எனக்கு 2 மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளார். எனது மூத்த மகள் செல்வ கண்ணகி ஆரல்வாய்மொழியில் உள்ள அண்ணா கல்லூரியில் 2 வது வருடம் படித்து வந்தாள் . தினமும் கல்லூரிக்கு பேருந்தில் சென்று வருவது வழக்கம். கடந்த 28.12.2018 ம் தேதி மாலை 3.45 மணியளவில் கல்லூரியில் இருந்து பேருந்தில் வந்து நான்குநேரியில் இருந்து அரசு பேருந்தில் சென்றுள்ளார். TN 72 4700

என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் எனது மூத்த மகள் செல்வ கண்ணகி ஓட்ட பின்னாடி எனது இளைய மகளும், எனது கொளுந்தியா மகன் முத்துப்பாண்டியும் அமர்ந்து வந்துள்ளனர். மாலை சுமார் 5.30 மணியளவில் டோல்கேட் அருகே உள்ள Ex.MLV S.V. கிருஷ்ணன் என்பவரின் தோட்டத்திற்கு தென்பக்கம் உள்ள ஒத்தயடி பாதையில் சென்று கொண்டிருக்கும் போது ஆஜர் எதிரிகள் என் மகளை வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டியவுடன் எனது மூத்த மகள் செல்வகண்ணகி காதில் போட்டிருந்த கம்மலை பயந்து கழட்டி கொடுத்துவிட்டாள். அய்யோ கள்ளன் கள்ளன் என்று மூன்று பேரும் சத்தம் போட்டுள்ளார்கள். உடனே ஆஜர் எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் மெயின் ரோட்டிலிருந்து வடக்கு நோக்கி சென்று விட்டார்கள். கம்மலின் மதிப்பு சுமார் 7500 இருக்கும். அதன்பின்பு உடனே என் மகள் கம்மலை பறி கொடுத்ததும், வீட்டில் சொல்லிவிட்டால் படிப்பை பாதியில் நிறுத்திவிடுவார்கள் என்ற பயத்தில் எங்களிடம் சொல்லவில்லை. எனது மனைவி எனது மகளிடம் ஏன் கம்மல் மங்குகிறது என்று கேட்டதும் நடந்த விவரத்தை என் மனைவியிடம் என் மகள் கூறியுள்ளார். அதன்பின்பு கடந்த 23.04.2019 ம் தேதி மாலை 4 மணியளவில் நானும் எனது மகள் செல்வ கண்ணகியும், நான்குநேரி காவல் நிலையம் சென்றோம். என் மகள் கைப்பட எழுதி எதிரி மீது நடவடிக்கை எடுக்க கூறி புகார் மனு கொடுத்தார். அதன் விவரம் எனக்கு தெரியும். அதன்பின்பு 10.08.2019 ம் தேதி நானும் எனது மகள் செல்வ கண்ணகியும் நான்குநேரி காவல் நிலையம் சென்றோம். அங்கு இரண்டாவது எதிரி காவல் நிலையத்தில் இருந்தார். அவர்தான் என் மகளிடம் கத்தியை காட்டி கம்மலை மிரட்டி பறித்த நபர் ஆவார். போட்டோவை காவல் ஆய்வாளரை என்னிடம் காட்டினார்கள். அவர்தான் 1வது எதிரி ஆவார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. எதிரிகளை எனக்கு தெரியும். சா.பொ.1 ஆக குறியீடு செய்யபட்டுள்ள

கம்மலை எனக்கு தெரியும். எதிரிகளின் பெயர் காவல் ஆய்வாளர் சொல்லி எங்களுக்கு தெரியும். வழக்கு சம்மநத்மாக போலிசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :

காலை எத்தனை மணிக்கு என் குழந்தைகள் வண்டியை எடுத்து கொண்டு போவார்கள் என்றால் வண்டியை காலையில் எடுத்து போக மாட்டார்கள். என் மகள் கம்மல் தவிர, செயின், வாட்ஜ் போன்ற ஆபரங்களை அணிந்திருந்தாரா என்றால் கம்மல் அணிந்திருந்தது எனக்கு தெரியும், மற்றவைகள் அணிந்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. எனது மற்றொரு மகள் செல்வ வேணி சம்பவத்தின் போது தங்கத்திலான ஒரு ஜிமிக்கி அணிந்திருந்தார். சம்பவம் நடந்த அன்று என் குழந்தைகளை நான் எப்போது பார்த்தேன் என்றால் வேலை முடிந்துவந்த பின்பு இரவு 7 மணிக்கு பார்த்தேன். நான் பிள்ளைகளை பார்க்கும் போது அவர்கள் வழக்கம் போல் எந்த வித பதற்றமும் பரபரப்பும் இல்லாமல் இருந்தார்களா என்றால் எப்போதும் போலதான் இருந்தார்கள். எனது மகளின் கம்மல் மேரி கோல்டு மாடல் ஆகும். எங்கே வாங்கினேன் என்றால் என் மனைவிதான் வாங்கினார். கம்மலை தொட்டுப்பார்த்தால் கூடுதலாக ஏதாவது தொங்குவது போல் சேர்ந்திருக்குமா என்றால் தொங்குவது போல் இருக்காது. நான் புகார் கொடுக்க போகும் போது ய A2 அங்கிருந்தார். புகார் கொடுக்க சென்றது மாலை 4 மணி இருக்கும். நானும் எனது மகளும் புகார் கொடுக்க சென்றிருந்தோம். எனது சின்ன மகள் அவரது கம்மலையும் கழட்ட சொன்னதாக என்னிடம் சொன்னாளா என்றால் இல்லை. மண் தரை பக்கத்திலும் தார் ரோடு இருக்கிறது என்றால் தள்ளி இருக்கிறது. என்

மகள் மேற்படி சம்பவம் குறித்து எதுவும் சொல்லும் வரை எனக்கு சம்பவம் பற்றி யாரும் சொல்லவும் இல்லை எனக்கு தெரியவும் செய்யாது. கம்மல் தொலைந்த அன்று நானோ என் மனைவியோ கம்மல் எங்கே என்று கேட்டோமா என்றால் என் மனைவி கேட்டாளா என்று தெரியாது. நான் கேட்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றும் என் மகள் வேறு எங்கோ தொலைத்து விட்டார் என்றும் அதை வீட்டில்சொல்ல பயந்து விட்டார் என்றும் பின்பு எனக்கு தெரியவந்து நான் கேட்ட போது கம்மலை வழி பறி செய்து கொண்டு சென்றதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

## மறுவிசாரணை

என்னை விசாரணை செய்யும் போது என்னுடன் என் மகள் வந்தார். அப்போதுதான் 2ம் எதிரியை காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அப்போதுதான் என் மகள் யார்என்று 2ம்எதிரியை அடையாளம் காட்டினார். புகார் மனு கொடுக்க போகும் போது 2ம் எதிரி இல்லை. 4 மாதங்கள் கழித்து விசாரணை செய்யும் போதுதான் 2ம் எதிரி இருந்தார்.